Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 06 (18-02-1992) செவ்வாய்க்கிழமை ஓசை: 365

## 1000 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

அரசாங்கப்பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நீக்குவதற்காக ஆயிரம் பட்டதாரிகளை வேலைக்கு சேர்த்துக்கொள்ள கல்விச்சேவை ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வருடம் மே மாதம் இந்த நியமனங்கள் வழங்கப்படும் என்றும் கல்விச் சேவைஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார். கடந்த ஒக்ரோபரில் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டனஎன்றும், ஒன்பதினாயிரம் (6ஆம் பக்கம் பார்க்க)

# அச்சுவேலி, தொண்டமனாற்றில் அகோர விமானக் குண்டுவீச்சு

## பலாலியை சூழ உக்கிர எறிகணை தாக்குதல்

(அச்சுவேலி)

நேற்று முற்பகல் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் அச்சுவேலி, தொண்டமனாறு பகுதிகளில் அகோரக் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இத் தாக்குதலில் மூன்று குண்டுவீச்சு விமானங்கள் ஈடுபட்டன. இதே வேளை பலாலி இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகள் மீது தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல்களின் காரணமாகவும் பல கட்டடங்கள், குடியிருப்புக்கள் சேதமடைந்தன.

நேற்று முற்பகல் அச்சுவேலிப் பகுதியில் குடியிருப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட அகோரக் குண்டுவீச்சுத் தாக்குதல்களினால் பல குடியிருப்புகள் சேதமடைந்தன. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடைக்காட்டிலிருந்து இடம் பெயர்ந்து அச்சுவேலியில் தங்கியிருக்கும் மக்கள் இதனால் பெரிதும் பாதிப்படைந்தனர். இத்தாக்குதலில் மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

தொண்டமனாறு பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சுத் தாக்குதலினால் வெளிச்சவீட்டு நிலையக் கட்டடங்கள் சேதமடைந்தன. அந்தப் பகுதியில் உலங்கு வானூர்தி மேற்கொண்ட 50 கலிபர் தாக்குதலினால் சிவனேஸ்வரன் (இடைக்காடு) என்பவர் காய (6-ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் முயற்சி புலிகளால் முறியடிப்பு

அச்சுவேலி இடைக்காட்டுப் பகுதியில் நேற்று அதிகாலையில் சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேற முயன்றனர். பலத்த துப்பாக்கிப் பிரயோகமும், உலங்கு வானூர்தியில் இருந்து 50 கலிபர் தாக்குதலும் விமானக் குண்டு வீச்சும் நடாத்தப்பட்டது.

இவர்களை முன்னேறவிடாது தடுத்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலைமேற்கொண்டனர். புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத சிறிலங்கா இராணுவம் இழப்புகளுடன் பின்வாங்கி முகாமிற்குள் சென்றது. இந்த நேரடி மோதலில் விடுதலைப் புலிகள்தரப்பில் ஒரு போராளி வீரச்சாவை அடைந்தார்.

### வீரச்சாவு

### தில்லை, கலாநிதி, மங்களா, தங்கப்பன்

அச்சுவேலி இடைக்காடு பகுதியில் நேற்று முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரவேங்கை தில்லை அல்லது சுரேன்(அருளானந்தசாமி ஜெயசீலன்-இன்பருட்டி பருத்தித்துறை) வீரச்சாவு அடைந்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஊரியான் பாதையை மூடிவிடத் திட்டமாம்

(கொழும்பு)

ஊரியான் பாதையை மூடினால் மட்டுமே ஆனையிறவுப் பாதையை மக்கள் பயன்படுத்துவர் என இராணுவம் கருதுவதாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் கடந்த சனிக்கிழமைமுதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் அப்பகுதிகளில் நேற்று முன் தினம் வரை பாரிய தாக்குதல் (6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கிராமங்கள் மீது பாரிய விமானக் குண்டுவீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் விளக்குவைத்தகுளம் என்னும் இடத்தில் நேற்றுக்காலை சிறுலங்கா விமானப்படையின் கண்மூடித்தனமான குண்டு வீச்சிற்கு இரண்டு தமிழ்ப் பெண்கள் பலியானார்கள்.

சுப்பிரமணியம் தங்கம்மா (மட்டக்களப்பு) ஏரம்பு பார்வதி (திருக்கோணமலை) ஆகிய இரு அப்பாவி பொது மக்களே குண்டு வீச்சுக்குப் பலியானவர்கள் ஆவர். வேறொருவர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தார்.

இதேவேளை நேற்று முன் தினம் மாலை மகிளங்குளம் பகுதியில்மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் வன்னியசிங்கம் என்பவரது இரண்டு வீடுகள் சேதமடைந்தன. அத்துடன் கால்நடைகள் பலவும் பலியாகியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## போட்டி முடிவுகள்

'ஈழநாதம்' இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவு விபரம் வருமாறு:

### சிறுகதை

'கனத்த இரவு' முதல் பரிசு: ம. ஜெயச்சந்திரன்
பிரதானவீதி, காங்கேசன்துறை

### கவிதை

'தேவை ஐந்து கோடி' முதல் பரிசு: க. சிவராசா
விழிசிட்டி, தெல்லிப்பழை

### கருத்துப்படம்

முதல் பரிசு: இணையிலான் பரமானந்த சனசமூக நிலையம் இணுவில்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சாவிற்கு அஞ்சி கொள்கையை விட்டுக் கொடுக்க முடியாது

-பிரேமதாசா

(கொழும்பு)

எனக்கு எந்தவித இன்னல் ஏற்பட்ட போதிலும்மக்களின் நலன் கருதி நான் கடைப்பிடிக்கும் அரசியல் கொள்கைகளில் இருந்து ஒருபோதும் விட்டு விலகப் போவதில்லை என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா குறிப்பிட்டுள்ளார்.

கோட்டை சிறி ஜெயவர்த்தனபுரவிலுள்ள ஐ. தே. க. தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற கொழும்பு மாவட்ட ஐ. தே. க. வருடாந்த மாநாட்டில் பேசுகையிலேயே இவ்வாறுஅவர் தெரிவித்தார்.

எனது சாதகம் இப்போது சரியில்லை என்று சிலர் கூறுகின்றார்கள். மார்ச் மாதத்தோடு ஆள் சரியாகிவிடுவார் என்றெல்லாம் எனக்கு சிலர் சாதகக் கணிப்புக் கூறுகிறார்கள். எனக்கு சிலவேளை நோய் வரலாம், என்னை யாராவது சுட்டுக் கொல்ல (6ஆம் பக்கம் பார்க்க)

### ஈழநாதம் சிறப்பிதழ்

நாளை ஈழநாதம் பத்திரிகை அதிக பக்கங்களுடன்இரண்டாவது ஆண்டுநிறைவுச் சிறப்பிதழாக வெளிவருகிறது. உங்கள் பிரதிகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்

## 'இந்தியா தமிழர்களை கைவிட்டு சிங்களவர் பக்கம் திரும்புகிறது'

### கொழும்பு பத்திரிகை விமர்சனம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழரின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக இந்தியா கடந்த காலத்தில் கடைப்பிடித்து வந்த வெளியுறவுக் கொள்கையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று கூறுகினறது. தமிழருக்குச் சார்பாக கடைப்பிடித்து வந்த கொள்கையை கைவிட்டு சிங்களவருக்கு ஆதரவான கொள்கையைக் கடைப்பிடிப்பதாக அப்பத்திரிகை தெரிவிக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கும், தமிழ்நாட்டு தேசியவாதிகளுக்கும எதிராக 'டடா' சட்டத்தைப் பிரயோகிப்பதையும், பாதுகாப்பு அற்ற நிலை நிலவுகின்றது எனத் தெரிந்து கொண்டு அகதிகளை அனுப்பி வைத்தமையும், சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளின் போதும், விமானத் தாக்குதல்களின் போதும் தமிழருக்கு பாரிய உயிரிழப்புக்கள் ஏற்படும் போதும் அதைக் கண்டும் காணாமலும் இருந்து வருவதை அடிப்படையாகக் கொண்டும் இந்திய வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றத்தை அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

## வரி விளம்பரம்


ஸ்ரெப்லேசர் தேவை

2000 W ஸ்ரெப்லேசர் (படி குறை, படி கூட்டு மாற்றி) தேவை. யாழ்பழைய புத்தகக் கடை 32, அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம் (சி/3935)



# உடன் தேவை

நல்ல நிலையில் உள்ள
இரும்புப் பெட்டகங்கள்
(IRON SAFE)
உடன் தேவை.

# சுவையருவி

மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி/3934)



# நூலகர் பதவி வெற்றிடம்

நூலக விஞ்ஞானத்திலும் ஆங்கிலத்திலும் போதிய அறிவுடையவரும், நூலக அனுபவம் உடையவரும், நூலகவியலில் ஆர்வமுடையவர்களும் விண்ணப்பிக்கவும். ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
25.02.1992 -க்குமுன்னர்விண்ணப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு:-

விளம்பர இலக்கம் - 123
மே/பா. ஈழநாதம்
31, மகேந்திரா வீதி
யாழ்ப்பாணம்
(2216)


# 90ஆம் நாள் நினைவு அஞ்சலி



வீரவேங்கை
பெரியதம்பி
(தங்கவேல் தங்கேஸ்வரன்)

வீரமலர்வு
17-4-79

வீரச்சாவு
22-11-91

மகனே உன் மரணத்தின் நோக்கம் என்ன?
அது தமிழ் மண் மீட்கும் படலம் அன்றோ
வீரனே - நீ சிந்திய குருதியினால் - பல
வீராதி வீரர்களும் விழித்தெழுவர் - உன்
புனைபெயரோ தரணியிலே பெரியதம்பி!
உன் கொள்கைகளும் தரணியிலே பெரியவையே
சொந்த பந்தம் ஏதுமில்லை -
சொத்து சுகம்கூட இல்லை
நெஞ்சோடு பால் ஊட்டி நான் வளர்த்த மகனே
கொஞ்சத்தான் இப்போது என்கூட இல்லை
என் உடலுக்குச் சுமையாக
உலவுவது மூச்சு - உலகத்தில் எனக்குள்ள
எல்லாமே போச்சு - சிறகொடிந்த
பறவையாக வாடுகின்றேன் மகனே!
ஆனாலும் என் இதயச் சிறையில்
சுடரொளியாய் வீற்றிருப்பாய்
மகனே - உன்னை ஈன்றெடுத்த
உன் அன்னை தங்கவேல் பூபதி-

அம்மா, அம்மம்மாமார், அப்பம்மாமார்,
மாமன்மார், மாமிமார்,
மச்சான்மார், மச்சாள்மார்,
பெரியம்மாமார், இளையம்மாமார்,
அண்ணன்மார், அக்காமார்,
உற்றார், உறவினர்கள்.

மட்டுவில் தெற்கு,
சந்திரபுரம், சாவகச்சேரி.

(2208)

# வேலைவாய்ப்பு மோசடி; வெளிநாட்டு முகவர் கைது

(கண்டி)

கடவுச்சீட்டில் மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் கண்டி கட்டுகஸ்தோட்டை பகுதியைச் சேர்ந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரான ஒரு பெண்ணும் அவரது கணவரும் கோட்டை பொலிசாரால் கைது செய்யப்பட்டு மேல் விசாரணைக்காக கட்டுகஸ்தோட்டை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பல மாதங்களுக்கு முன் இவர்களால் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் கடவுச்சீட்டில் படம் மாற்றப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்த நெதர்லாந்து அதிகாரிகள் அவரை இலங்கைக்குத்திருப்பிஅனுப்பியிருந்தனர்.

இலங்கை வந்த இப்பெண் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரான பெண்ணும் அவரது கணவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

## பதிவு செய்யுமாறு வேண்டுகோள்

யாழ். மாவட்டத்தில் மேசன் வேலை, வர்ணப் பூச்சு வேலை செய்வோரை உடனடியாகப் பதிவு செய்து கொள்ளுமாறு சீமெந்து கட்டடத்தொழிலாளர் சங்கச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் யாழ் மாவட்டத்திலுள்ள சகல சன சமூக நிலையங்கள், நலன்விரும்பிகள் தமது பகுதியில் உள்ள தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி அவர்களைச் சங்கத்தில் பதிவு செய்ய ஒத்துழைக்கும்படியும்அவர்கேட்டுள்ளார்

## இ. தொ. கா. விளக்கம்

(கொழும்பு)

இ தொ.கா.கடந்த வியாழக்கிழமை இனப்பிரச்சினைத் தீர்விற்கான பாராளு மன்றத் தெரிவுக் குழு முன் தோன்றி தனது சிபாரிசு பற்றி எடுத்து விளக்கியது என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள்தெரிவிக்கின்றன.

### ஜெனரல்

அங்கு கற்பிக்கும் மொழி ஆங்கிலமாக இருப்பதால் இம் மாணவர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியமாகவிருக்கின்றது.

### முக்கிய கற்கைநெறிகள்

பாதுகாப்பும் போர்த் திறனுமே இக் கல்லூரியின் முக்கிய கற்கை நெறிகளாகும். இராணுவம், கடற்படை' விமானப்படை ஆகிய மூன்று துறைகளில் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன முப்படைகளையும் சேர்ந்த பட்டறிவுமிக்க தகைமை பெற்ற உயர் அதிகாரிகளால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. இராணுவ சம்பந்தமற்ற பாடங்களான ஆங்கிலம், சட்டம், சர்வதேச விவகாரம், முகாமைத்துவம் ஆகியவைகளும் இங்கு போதிக்கப்படுகின்றன.

இக்கல்லூரியில் கல்வித்துறைக்கு டாக்டர் எஸ். எஸ். கொக்குலுவல (Dr. S. S. Kekulawela) தலைவராகப் பணியாற்றுகின்றார். மொழிகள் விஞ்ஞானம் கணிதமும் கொம்பியூட்டரும், சமூக விஞ்ஞானம், மனிதத்துவம், கப்பல் பொறியியல் Marine Engineering) இயந்திரப் பொறியியல், மின்சத்தி இலத்திரனியல், தொலைத் தொடர்புப் பொறியியல் Mechanical, Electric, Electronic and Telecommunication Engineering) ஆகிய ஏழுதுறைகளாக கல்வித்துறை வகுக்கப்பட்டு விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன.

நன்றி : டெய்லி நியூஸ்
20-01-92

# அவுஸ். உலகத் தமிழர் பண்பாட்டு மாநாடு

(வேலணை)

உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச மாநில மாநாடு இந்த வருடம் (அக்டோபர்) ஐப்பசி மாதம் 3-ம், 4-ம், 5-ம் திகதிகளாகிய மூன்று நாட்களுக்கு அவுஸ்திரேலியாவின் தலைநகரான சிட்னி மாநகரில் மிகப்பிரமாண்டமான முறையில் நடைபெற இருக்கிறது.

இம் மாநாட்டை நடாத்துவதற்கானஏற்பாடுகளைதலைமையகக் கிளைத் தலைவர் திரு. இர. ந வீரப்பனும் மற்றும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்துக் கிளைகளும் அதனோடிணைந்த தமிழ்க் கழகங்களும் சேர்ந்து செய்து வருகின்றன. மாநாட்டிற்கு உலகின் பல இடங்களில் இருந்தும் தமிழ் மொழி, தமிழ் பண்பாட்டுக் கலை, கலாசார, வரலாற்றுத் துறைகளில் அதிக ஈடுபாடும் ஆர்வமும் கொண்டுள்ள புலவர்கள், பேராசிரியர்கள், மற்றும் பல்துறைகளிலும் தேர்ச்சி பெற்று விளங்குபவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள் என அங்கிருந்து வரும் செய்திகள் மூலம் தெரிவிக்கப்படுகின்றன. (41)

# பூநகரி பகுதியில் பலத்த குண்டுச் சத்தம்

(குருநகர்)

நேற்று (17 - 2 - 92) காலை 10 30 மணியில் இருந்து குடாக்கடலின் தென்பகுதியாக -

பூநகரி - கல்முனை பள்ளிக்குடாப் பக்கம் விட்டுவிட்டு பலத்த குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

அரைமணி நேரம்வரை நீடித்த அந்தக் குண்டுச் சத்தம் யாழ். நகரம்வரை கேட்கக்கூடியதாக இருந்தது.

அதேபோன்ற மற்றும் இரண்டு குண்டுச் சத்தங்கள் பிற்பகல் 3 30 மணியளவில் கிழக்குத் திசையில் நாவற்குழி தச்சந்தோப்பு பக்கமிருந்து கேட்டன.

குண்டு வெடிப்புகள் பற்றிய மேலதிக விபரங்கள் செய்தி எழுதப்படும் வரையில் அறிய முடியவில்லை. (21)

# காமினிக்கும் எனக்கும் தலைமைப் போட்டி இல்லை

-- லலித்

(கொழும்பு)

எனக்கும் காமினி திசாநாயக்காவிற்கும் இடையிலோ அல்லதுவேறெவருக்கும்இடையிலோ தலைமைப் பதவிக்கான போட்டி எதுவும் கிடையாது. இது அரசாங்க சார்பு தகவல் தொடர்புசாதனங்கள் புரளியாகும் என்று திரு லலித் அத்துலத்முதலி கொழும்புபத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் கட்சி சம்பிரதாய பூர்வமாக அநுராதபுரம் சிறிமகா போதியில் மதச்சடங்கொன்றைநடத்திசெயற்படத் தொடங்கியதையடுத்து அம்முன்னணியின் முக்கியஸ்தரான லலித் அத்துலத் முதலி பத்திரிகைக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் மேலும் கூறுகையில்; நாங்கள் எமது கொள்கையில்தெளிவாகஇருக்கின்றோம். ஒரு கூட்டுத்தலைமைத்துவம் உருவாக வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அதற்காகப் பணியாற்றி வருகின்றோம். நாங்கள் தனிமனித நாடகத்தை விரும்பவில்லை. தனி மனித நாடகத்தின் ஆபத்துக்களை நாங்கள் அறிந்திருக்கின்றோம். மேலும் தனிமனித நாடகத்தின் விளைவால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள் எனவே அந்த நிலையை நாம் மீண்டும் உருவாக்கமாட்டோம். நாங்கள்தலைமைத்துவத்திற்கு ஒரு புதிய தராதரத்தைஏற்படுத்த முயல்கின்றோம் எனவும்குறிப்பிட்டார்.

# நினைவு கூருகின்றோம்

## 1992-02-18

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் தங்கவேலாயுதபுரத்தில் சிறிலங்காப் படையினரின் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**ரவிக்குமார்** [ம. புண்ணியமூர்த்தி - தம்பிலுவில்-01]

கடலில் மீன்பிடிக்கச் சென்றபோது சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கடற்தொழிலாளி

சம்மாந்துறையில் சிறிலங்கா ஊர்காவல் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய

★ **தாடி** [குணசேகரம் கந்தசாமி - பூநகர், மூதூர்]

1988ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

★ **ஆறுமுகம் சச்சிதானந்தம்** - [தங்கநகர், மூதூர்]

1990ஆம் ஆண்டு வசாவிளானில் தவறுதலாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த

**ஜெயதாஸ்** [சித்திரவடிவேல் கெங்காதரன் - சத்தியதோட்டம், கரவெட்டி]

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி-39 28)

# “ஊடுருவல்காரர்களை நாங்கள் வெறுமனே விட்டுவைக்க மாட்டோம்”

## - சரத் பவார்

(டில்லி)

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதியிலிருந்துஇந்தியபிரதேசத்திற்குள் நுழையும் ஊடுருவல்காரர்கள் வெறுமனே விட்டுவைக்கப்பட மாட்டார்கள் என இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் சரத் பவார் குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீரிய நிலைபரம் குறித்து செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமானுல்லாகானின் வருகையினை நாம் எதிர்பார்த்தே இருக்கின்றோம் என்றும்,

எமக்கு வசதியாகவே அவரது நடவடிக்கைகள் அமைந்துள்ளன என்றும், அவர் மேல் ஆறு கொலைக்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்றும் சரத்பவார் குறிப்பிட்டார்.

அமெரிக்காவிற்கும், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ள சரத்பவார் தனது பயணம் குறித்து குறிப்பிடும் போது காஷ்மீர் பிரச்சினையில், இந்தியாவின் நியாய பூர்வமான நிலைப்பாட்டை தான் விளக்கப் போவதாக தெரிவித்தார்.

அத்துடன் தமது பயணத்தின்போது லேசுரக சண்டை விமானங்கள் தயாரிக்கும் திட்டம் குறித்து பேசவுள்ளதாகவும்,

இதனைத் தயாரிப்பதற்கு கூட்டுத் திட்டம் ஒன்றை மேற்குலகுடன் சேர்ந்து தாம் தயாரிக்க இருப்பதாகவும் ஆனால் இத் திட்டத்திற்கு நிதி பற்றி மட்டுமே கூட்டு முயற்சி இருக்குமென்றும் அர்வ தெரிவித்தார்.

# பேச்சுக்கள் மூலமே தீர்க்கப்பட வேண்டும்

## - பெனாசிர்

இந்தியாவுடன் அமைதியான வழியில் இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் மூலமாக காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுமாறு பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய சட்டப்பேரவையில் உரையாற்றிய பெனாசீர் நவாப் ஷெரீப் அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை சிதைத்து சீர்குலைத்து விட்டதாகவும் அது பாகிஸ்தானின் மனித உரிமைகளை அப்பட்டமாகவும் மீறிவருகிறது என்றும் குற்றஞ்சாட்டினார்

பாகிஸ்தானின் தவறான வெளியுறவுக்கொள்கைகாரணமாகவே இப்பொழுது பாகிஸ்தான் உலகில் தனித்து ஒதுக்கப்பட்ட ஒரு நிலையில் இருந்து வருவதாகவும், பாகிஸ்தானின் இன்றைய சீர்கெட்ட நிலைக்கு பாகிஸ்தானிய ஜனாதிபதி குலாம் இஷாக் கானே பொறுப்பு என்றும் குறிப்பிட்டார்.

# புதுடில்லியில் ஆர்ப்பாட்டம்

பஞ்சாப் மற்றும் காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு ஆதரவு தரும் பாகிஸ்தானின் ஈடுபாட்டை எதிர்த்து அகாலிதள்ளின் மாஸ்ரர் தாராசிங்கின் பிரிவு நேற்று மூன்தினம் இந்தியாவிலுள்ள பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகர் நிலையத்திற்கு எதிரில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

பாகிஸ்தான் தீய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவும், இந்தியாவிற்கு எதிரான பொய்ப்பிரசாரத்தை அது பரப்பி வருவதாகவும் இஸ்லாமபாத்தின் மீது குற்றஞ்சாட்டும் மகஜர் ஒன்றையும் அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகரிடம் ஒப்படைத்தனர்.

# ஈராக்கின் அச்சுறுத்தல் தொடர்ந்தும் இருக்கிறது

## - அமெரிக்க ஜனாதிபதி

பாக்தாத்திற்கு எதிரான போருளாதார தடைகளை நியாயப்படுத்தி ஈராக் ‘‘வழமைக்கு மாறான அச்சுறுத்தலாக’’ விளங்குகிறது என்று ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கடந்த செவ்வாய்க் கிழமை அறிவித்துள்ளார்.

ஒரு வருடத்துக்கு முன் ஆக்கிரமிப்புச் செய்த குவைத்திலிருந்து அமெரிக்க தலைமையிலான நேசநாடுகள் ஈராக்கியரை வெளியேற்றியது. அதன் பின்னர் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விதித்த தீர்மானங்களுக்கு இணங்கி நடக்கவில்லை என்று புஷ் காங்கிரசுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

தீர்மானத்திற்கு இணங்கி நடக்க சதாம் ஹுசைனுக்கு நெருக்குதலை ஏற்படுத்தப் போவதாக வெள்ளைமாளிகை சபதமெடுத்துள்ளது. அண்மைய வாரங்களில் இவ் வெள்ளை மாளிகை சதாம் எதிர்வாதங்களை எழுப்பியுள்ளது.

சதாம் ஹுசைனின் ஆட்சி ஐக்கிய அமெரிக்க தேசிய பாதுகாப்பிற்கும் வெளிநாட்டுக் கொள்கைக்கும் வழமைக்குமாறான அசாதாரணமான அச்சுறுத்தலாகவிளங்குகிறது. பிராந்திய சமாதான பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக விளங்குகிறது என்றும் புஷ் தெரிவித்துள்ளார்.

பிராந்திய சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக விளங்குவதைத் தடுக்க அமெரிக்கா தொடர்ந்தும் பொருளாதார தடைகளை விதிக்கும் எனத் தெரிவித்தார்.

கடந்தவாரம் சி.ஐ.ஏ. பணிப்பாளர்றோபேட் கேட்ஸ் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# உதவி வழங்க மறுப்பு

(ஜோகன்ஸ்பர்க்)

கறுப்பர்களுக்கும், வெள்ளையர்களுக்கும் இடையே பொது இணக்கம் எட்டப்படாதவரை உலகவங்கி தென் ஆபிரிக்காவிற்கு எந்த உதவிகளையும் வழங்க மாட்டாதெனத் தெரிய வருகின்றது

## ரஷ்யசீர்திருத்தம்

# மொஸ்கோவில் கம்யூனிஸ்டுகளின் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(மொஸ்கோ)

ஆயிரக்கணக்கான ரஷ்ய கம்யூனிஸ்டுகளும் தீவிரவாதிகளும் மத்திய மொஸ்கோவில் ஞாயிற்றுக்கிழமை போட்டி ஆர்ப்பாட்டங்களை நடாத்தினர்.

ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் தனது தீவிர சந்தைப் பொருளாதாரத்தை அறிமுகப் படுத்தி ஐந்து வாரங்களுக்கு பின்னர் இருக்கக்கூடிய ஆழமான சமூக கொந்தளிப்புக்களை ஊர்வலங்கள் எடுத்துக்காட்டின.

‘‘யெல்சின் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று சுமார் 10 000 கம்யூனிஸ்டுகளும் ரஷ்யத் தேசியவாதிகளும் கோஷமிட்டனர் ஜனவரி 2ம் திகதி ரஷ்யாவின் விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற முதலாவது பாரிய ஆர்ப்பாட்டம் இதுவாகும்

சிறு ஒய்வூதியத்தினால் பெரும் துன்பம் அனுபவிக்கும் முதிர்ந்த மொஸ்கோ வாதிகளும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இன்றையசாப்பாடுஇதுதான். சீனி இன்றி தேநீர், இறைச்சி இல்லாமல் சூப், பட்டர் இல்லாமல் கஞ்சி என்ற சுலோக அட்டைகளும்’’ மாபெரும் தேசமே கிளர்ந்தெழு எனும் கீதமும் ஊர்வலத்தில் இசைத்தனர்

மேலும் 11,000 மக்கள் யெல்சினின் வெள்ளை மாளிகைக்கு வெளியே திரண்டு தமது எதிர்ப்பு கோஷங்களைத் தெரிவித்தனர்.

# டைசன் சொத்துக்கள் வழக்கால் பாதிப்பு

(வாஷிங்டன்)

முன்னாள் அதிபாரக்குத்துச் சண்டைவீரர் மைக்டைசனின் சொத்துக்கள் கடந்த ஏழு ஆண்டுகளில் குத்துச்சண்டை மூலம் அவர்பத்துக்கோடி டொலர் (சுமார்428 கோடி ரூபா) சம்பாதித்திருக்கிறார் ஆனால் இச்சொத்துக்கள் விரைவாகக் குறைந்துவருவதாக வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

மைக்டைசன் கடந்த 12 மாதங்களில் ‘ஷொப்பிங்’கிற்கும் வழக்கறிஞர்களுக்கும் 50 லட்சம் டொலர்களை (சுமார் இருபத்தியொருகோடி நாற்பது லட்சம்ரூபா) செலவழித்திருக்கிறார்.

சென்ற ஆண்டில் தனது சொத்து ஒன்றரைக் கோடி டொலர்(அறுபதுகோடிக்கு மேல்)என டைஸன் கூறியிருந்தார். கற்பழிப்புவழக்கில் வழக்கறிஞர்களுக்கு இருபது லட்சம் டொலர் கொடுக்க வேண்டியுள்ளதென்றும் அவர் கூறினார்.

சென்ற ஆண்டு சாம்பியன் ஹொலீல்டுடன் சண்டையிடாததால் அவர்ஒன்றரைக் கோடி டொலரை இழந்தார். காயமுற்றிருந்ததால் இந்தப் போட்டியில் அவரால் கலந்து கொள்ளமுடியவில்லை

பணம்கோடிக்கணக்கில் வந்து கொண்டிருக்கிறது என்னால் அதை எண்ணத்தான் முடியவில்லை எனக் கூறும் டைசனுக்கு ஒகியோவில் ஒருமாளிகை இருக்கிறது கோடிக்கணக்கான டொலர் நகைகளையும் அவர்சேகரித்து வைத்திருக்கிறார். முப்பது கார்கள் அவருக்குச் சொந்தமாக உள்ளன ஆனால் பணத்தை தண்ணீர் போல் செலவழிப்பதால் அது குறைந்து வருவதாகவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## ரஷ்யாவின் அணு ஆயுத

# தயாரிப்பு நிலையங்களுக்கு ஜேம்ஸ்பேக்கர் விஜயம்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் அணு ஆயுத தயாரிப்பு நிலையங்களுக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் எதிர்பாராதவிதமாக விஜயமொன்றை மேற்கொண்டார்.

அப்போது அங்கிருந்த விஞ்ஞானிகளுடன் பேசிய பேக்கர் சமாதான சூழலிலான செயற்பாடுகளில் அவர்களது ஆற்றல் பயன்படுத்தப்படுமென உறுதியளித்தார்.

மொஸ்கோவிலிருந்து 3200 கிலோ மீற்றர் தொலைவில் பனி படர்ந்த யூரல் மலைத் தொடரிலுள்ள இந்த அணுவாயுத தொழிலகம் 1955 -ல் ஆரம்பிக்கப்பட்டது முதல் மிக இரகசியமாகவே பராமரிக்கப்பட்டு வந்தது. இங்கு விஜயம் செய்த முதல் வெளிநாட்டவரும், அமெரிக்கரும் ஜேம்ஸ் பேக்கரே ஆவார்.

அங்குள்ள சுமார் முப்பது விஞ்ஞானிகளுடன் திரு. ஜேம்ஸ் பேக்கர் பேசுகையில் மேலும் திட்டமிடப்பட்டு வரும் புதிய மையம் அமைக்கப்படும்போது அவர்களது வேலை வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்படும் எனவும், ரஷ்ய விஞ்ஞானிகள் அனுபவிக்கும் கஷ்டங்களைப் போக்குவது அமெரிக்காவினதும் அதன் நட்பு நாடுகளினதும் முதற் பணி எனவும் குறிப்பிட்டார்.

## ஈரானுடன்

# தொடர்புகளைத் துண்டிக்க சல்மான் ருஷ்டி கோரிக்கை

தன்மீதான கொலை அச்சுறுத்தலை ஈரான் நீக்கும் வரை டெஹ்ரானுடனான உறவில் முன்னேற்றம் எதுவும் ஏற்படமாட்டாதென பிரித்தானியா அறிவிக்கவேண்டுமென நாவலாசிரியர் சல்மான் ருஷ்டி கேட்டிருக்கிறார்.

முஸ்லிம்களின் ஆத்திரத்தைக் கிளறும் விதத்தில் ‘‘சாத்தானின் வசனங்கள்’’ என்றநூலைஇவர்எழுதியதால் ஈரான் இவரைக் கொலை செய்யும் அச்சுறுத்தலை விடுத்தது.

# சர்வதேசஉதவியைகோருமாறு பங்களாதேஷிடம் கோரிக்கை

(டாக்கா)

பர்மாவிலிருந்து கடந்த ஆறு வாரங்களில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட முஸ்லிம் அகதிகள் பங்களாதேஷிற்குள் வந்துள்ள நிலையில், சர்வதேச உதவிக்கு தனது கதவுகளைத் திறந்து வைக்குமாறு அமெரிக்கா பங்களா தேஷைக் கேட்டுள்ளது.

ரொஹிங்கியாஸ் என அழைக்கப்படும் பர்மிய முஸ்லிம்களுக்கு எதிராக பர்மிய இராணுவம் கொலையிலும், கடத்தலிலும், கற்பழிப்பிலும் ஈடுபடுவதுடன் நிர்ப்பந்தமாக அவர்களை வேலைக்குக் கொண்டு செல்வதிலும் ஈடுபட்டுள்ளது. இவற்றிலிருந்து தப்புவதற்காக ஓடிவரும் முஸ்லிம் அகதிகள் பங்களாதேஷ் முகாம்களில் நோயினாலும், போஷாக்கின்மையினாலும் அவதியுற்று வருகிறார்கள்.

நாள் ஒன்றிற்கு நூறு முதல் ஆயிரம் பேர் வரை வருகிறார்கள் என வெளிநாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்.

பங்களாதேஷ் அரசாங்கம் அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் பர்மிய அரசாங்கத்துடன் ஒரு பரிகாரம் காண அமைதியான ராஜதந்திர முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது. ஆனால் இது சாத்தியமில்லாத விஷயம் எனக் கருதும் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் சர்வதேச உதவிக்கு தனது கதவுகளைத் திறந்து விடுமாறு பங்களாதேஷை வலியுறுத்தி வருகிறது

இதே வேளை அமெரிக்காவுக்கு வரும் ஹெரோயினில் அறுபது சத விகிதத்துக்கு பர்மாவே தளமாக இருக்கிறது. ஆனால் இப்பிரச்சினையைத் தீர்க்க பர்மா எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால் பர்மாவில் இடம் பெறும் சம்பவங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் படி அமெரிக்கா அதன் அண்டை நாடுகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்த போதிலும் அவை அமைதியான ராஜதந்திர அணுகு முறையையே கடைப்பிடித்து வருகின்றன.

# கடும்புயலுக்கு ஆறுபேர் பலி

(வாஷிங்டன்)

தென் கலிபோர்னியாவில் வீசிய கடும் புயலுக்கு ஆறு பேர் பலியாகியுள்ளனர் எனவும் இன்னும் பலரைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

நான்கு நாட்கள் தொடர்ந்து வீசிய கடும்புயலினால் தென்கலிபோர்ணியா மிகவும் பாதிப்படைந்துள்ளதாகவும் இதனால் இலட்சக்கணக்கான மக்களை வீடுகளில் இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

# பிரயாணிகள் காப்பாற்றப்பட்டனர்

இந்தோனேஷியாவில் சுமத்ரா தீவில் கப்பல்ஒன்று தீப்பிடித்துக்கொண்டது. தீ உடனே அணைக்கப்பட்டதனால் கப்பலில் இருந்த 400 பிரயாணிகளும் பாதுகாப்பாக காப்பாற்றப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவலை

# இராணுவக் கல்லூரி

**கலாநிதி எச். எஸ். எஸ். நிசங்கா**

**1953** ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதியிலிருந்து 1956 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வரை பிரதம மந்திரியாகவும் பாதுகாப்பு மந்திரியாகவும் பணியாற்றிய இலங்கையின் பெருமை மிக்க தலைவர் ஜெனரல்சேர்ஜோன் கொத்தலாவலை (Gen Sir John Kotelawala) அவர்களின் அரசியல் மேதகைப்பண்பு, நாட்டுப்பற்று, சிறப்பியல்புகள் ஆகியவற்றுக்குச் சான்று பகர்வதாக சேர் ஜோன் கொத்தலாவலை இராணுவக் கல்லூரி விளங்குகின்றது.

57 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட அவரது தோட்டத்தையும், கந்தாவளை வளவு என அழைக்கப்படும் அவரது இல்லத்தையும், கிடைத்தற்கரிய விலைமதிப்பற்ற நூல்களையும் தங்கம் போல் மின்னுகின்ற பதக்கங்களையும், அவர் மிகவும் நேசித்து வளர்த்த மெனிக்கே (Menike) என்ற பெண் யானை, மான் கூட்டம், மயில்கள், வளர்ப்பு மீன்கள் உட்பட அவருடைய அசையும் சொத்துக்கள் யாவற்றையும் சிறிலங்காவுக்கு நன்கொடையாக வழங்க எடுத்த தன்னுடைய முடிவை எண்ணி அவர் மிகவும் திருப்தியடைந்திருப்பார்கள் என நான் எண்ணுகின்றேன்

அவர் தனது வாழ்நாள் முழுவதும் தேடிக் கொண்ட சொத்துக்களும், அவருக்கு மரபுரிமையாகக் கிடைத்த சொத்துக்களும் தற்போது சேர் ஜோன் இராணுவக்கல்லூரிக்குச்சொந்தமாகவுள்ளது. தனக்குச் சீவிய உரித்து வைத்துக் கொண்டு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி இதனை முதன் முதலாக நன்கொடையாகக் கொடுத்த சேர் ஜோன் அவர்கள் இராணுவத் தளபதிகளின் வேண்டுகோளுக்கமைய தனது மனதை மாற்றி தனக்குள்ள சீவிய உரித்தை விட்டுக் கொடுத்து, தான் உயிருடன் இருக்கும் போதே இந்தக் கல்லூரி நிறுவப்பட வேண்டும் என விரும்பினார்.

1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி இவர் தனது சொத்துக்களை முழுமையாகவும் அவற்றிற்கு யாரும் சொந்தம் கொண்டாட முடியாத வகையிலும் அவற்றில் ஏதும் மாற்றங்கள் செய்ய முடியாத வகையிலும் நாட்டுக்கு நன்கொடையாக வழங்கினார்.

பாதுகாப்பு அதிகாரிகளுடன் அவர் இறப்பதற்குச் சற்று முன்னர் அவரது இல்லம் சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா சிறிலங்காவில் வழங்கப்படக் கூடிய அதி உன்னத இராணுவ விருதான ஜெனரல் என்ற பட்டத்தை அவருக்கு வழங்கி அவரைக் கௌரவித்தார். இறக்கும் தறுவாயில் தனக்கு அளிக்கப்பட்ட இந்தப் பட்டத்தை சேர் ஜோன் மரியாதையுடன் ஏற்று ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை ஆனார்.

## ஆரம்பம்

1980 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆந் திகதியன்று இறந்த சேர்ஜோன், ஐந்து நாட்களின் பின்னர் பூரண இராணுவ மரியாதையுடன் தகனஞ் செய்யப்பட்டார். முன்னாள் ஜனாதிபதியும், முப்படைகளின் தளபதியுமான திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா அவர்கள் கொத்தலாவலை இராணுவக் கல்லூரியை 1980 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி எளிதான முறையில் கந்தாவளை வளவில் தொடக்கி வைத்தார்

முப்படைகளிலுமிருந்து முப்பத்திநான்கு அதிகாரிகள் தரத்தினருக்கான பயிலுனர்கள் இந்தக் கல்லூரியில் சேர்க்கப்பட்டு 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆந் திகதி செயல்முறை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது


சேர் ஜோன் ஒரு போர் வீரராக இருந்ததன் காரணமாக நல்ல கட்டுப்பாடான, நவீன பாதுகாப்பு அமைப்பு ஒன்று சிறிலங்காவுக்கு முக்கியம் என்பதை உணர்ந்தமையால் அதை உருவாக்குவதற்குத் தேவையான இராணுவக் கல்லூரியை அமைப்பதற்குத் தன்னுடைய சொத்துக்களை நன்கொடையாக வழங்குவதற்குத் தீர்மானித்தார்.

முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகள் தர இளம் பயிற்சியாளர்கள் 225 பேர் கம்பீரமாகச் சீருடை அணிந்து கட்டுப்பாட்டுடன் அங்கு மிங்கும் இக் கல்லூரில் உலாவி வருவதை உயிருடன் இருந்து அவர் பார்ப்பாரானால் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பார்.

''பாதுகாப்புத்துறைப் பட்டத்தை விரைவாகப் பெறுங்கள், இந்தக் கல்லூரியை விட்டுச் செல்லுங்கள் நாட்டுக்காகச் சண்டை செய்து நாட்டுக்குள்ளேயும், நாட்டுக்கு வெளியேயும் உள்ள பகைவர்களிடமிருந்து எங்கள் தாய் நாட்டைக் காப்பாற்றுங்கள். படை வீரர்களே நான் உங்கள் எல்லோரையும் வாழ்த்துகிறேன். 'என்றும் நாட்டுக்காக' என்ற எனது தாரகமந்திரத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்'' என அவர் இப்பயிற்சியாளர்களை உற்சாகப்படுத்துவதை எங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது.

## பல்கலைக்கழக தகுதி

இந்தக் கல்லூரி ஆரம்பத்தில் கொழும்பு மற்றும் மொரட்டுவப் பல்கலைக் கழகங்களின் இணைப்புக் கல்லூரியாக இருந்து வந்ததுடன், அப்பல்கலைக் கழகங்களில்



ஒன்று இங்கு பயிற்சியை முடித்து வெளியேறும் மாணவர்களுக்குப் பட்டத்தை வழங்கி வந்தது. 1988-ம் ஆண்டு பாராளுமன்றம் நிறைவேற்றிய 27 வது சட்டத்துக்கமைய இந்தக்கல்லூரிக்கு முழுப்பல்கலைக்கழக தகுதி 1989-ம் ஆண்டுஜனவரி மாதம் 19-ம் திகதி வழங்கப்பட்டதன் மூலம் பட்டத்தை வழங்கும் ஒரு கல்லூரியாக இது உயர்ச்சி பெற்றது.

இந்தக் கல்லூரியில் கற்பிக்கப்படுகின்ற பாடவிதானங்களை நோக்குகையில் இதற்காகச் செலவிடப்படும் பணம் ஒரு நியாயமான வழியில் செலவிடப்படுகின்றது என்பதைக்காணமுடிகின்றது. மூன்று வருடப்படிப்பையும், பயிற்சியையும் இக்கல்லூரியில் பெறும் ஒவ்வொரு மாணவனுக்கும் அரசாங்கம் நான்கு லட்சம் ரூபாவுக்கு மேல் செலவழிக்கின்றது.

அதிகாரிகள் தரத்திலுள்ள இந்த மாணவர்கள் முதலாம் வருடமும், மூன்றாம் வருடமும் தாங்கள் எந்தத் துறையைச் சார்ந்தவர்களோ அந்தத் துறை சார்ந்த கல்வியைப் பயிலுகின்றனர் இருப்பினும் இரண்டாம் வருடத்தில் அவர்கள் தங்கள் வெளிக்களப் பயிற்சியை, கல்லூரிக்கு வெளியேயுள்ள இராணுவ, கடற்படை, வான்படையைச் சேர்ந்த முகாம்களில் பெறவேண்டியுள்ளனர். முதலாம் மூன்றாம் கல்வியாண்டிலும் அதிகாரிகள் தரத்திலுள்ள இப்பயிலுனர்கள் கடுமையான உடற்பயிற்சியைப் பெறுகின்றனர்.

பல்கலைக் கழகங்களிலுள்ள வழமையான மதிப்பீட்டு முறைகளுடன் (சோதனை-செய்முறைப்பயிற்சி) கொத்தலாவலை இராணுவக் கல்லூரி வேறுவிதமான மதிப்பீட்டு முறைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இறுதியாண்டு மாணவர்கள் ஒவ்வொருவரும் குழுக்களாகச் சேர்ந்து தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் ஆக்கங்களை முன்வைக்கும் முறையும் இம்மதிப்பீடுகளில் ஒன்றாகும்.

## திறமையை மதிப்பிடுதல்

கொர்பசேவும் சோவியத் யூனியனும். ஜே.வி.பி. தமிழீழ விடுதலைப்புலிகள், இந்திய அமைதிகாக்கும் படை, வியட்னாம் போரும் அமெரிக்காவும், போக்லன்ட் போர். பாலைவனப்புயல் நடவடிக்கை, காஷ்மீர் பிரச்சினை ஆகியவையே 1991-ம் ஆண்டு போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விடயங்களாகும்.

இந்த விடயங்களைச் சமர்ப்பிக்க மாணவர்களை விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு பெரிய அளவிலான ஏடுகளை உருவாக்க வேண்டியிருப்பது மாத்திரமின்றி இவற்றில் உள்ளடக்கிய விடயங்களை மீண்டும் வாய்மூலமும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இந்த ஆய்வுகளை மாணவர்கள் மேற்கொள்ள கல்லூரியிலுள்ள நவீன தொழில்நுட்ப வசதிகளை நன்கு பயன்படுத்தியுள்ளார்கள். இந்த விடயங்களிலிருந்து இராணுவம் மற்றும் போர்த்திறன் சார்ந்த ஆற்றலையும் வேறுபல அம்சங்களில் அவர்களுக்குள்ள ஆற்றலையும் பரீட்சிப்பதே இந்த நடைமுறையின் நோக்கமாகும்


சென்றவருடம் இந்தக் குழுக்கள் கொழும்பிலமைந்துள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களிலும். லேக்கவுஸ் பத்திரிகை நிறுவனம் போன்றவற்றில் இயங்கும் நூலகங்களிலுமுள்ள வசதிகளைத் தங்கள் ஆய்வுக்குப் பயன்படுத்தியுள்ளனர் இக்கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர்கள் நடுவர்களாகவிருந்து இக்குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகளை மதிப்பீடு செய்த வேளையில் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களும் அங்கு வந்திருந்தனர் ஒவ்வொரு ஆய்வுரையும் இக் கல்லூரியின் படைத் தலைவராலோ (Commandant) அல்லது துணை படைத்தலைவராலோ (Deputy Commandant) மதிப்பீடு செய்யப்படுகின்றது.

வெறுமனே புத்தகங்களைப் படிப்பதால் மாத்திரம் கொத்தலாவலை இராணுவக் கல்லூரியில் பட்டங்களைப் பெற்றுவிட முடியாது. ஒரு மாணவன் பாதுகாப்புத் துறையில் பெற்றுள்ள அறிவும் சாமர்த்தியமுமே அவருக்கு ஒரு பட்டத்தைக் கொடுக்க முடியுமா என்பதைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக விளங்குகின்றது.

சாதாரணமாகக் கல்லூரியில் கொடுக்கப்படுகின்ற பாடங்கள் மாத்திரமின்றி, நன்கு பராமரிக்கப்படும் இந்த மாணவர்கள் முழுமையான பயிற்சியைப் பெறவேண்டியிருப்பதுடன், ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனியான அறைகளும் தரம்மிக்க உணவும், வைத்திய வசதிகளும், சீருடைகளும் அத்துடன் கால்பந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம், றகர்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம். நீச்சல், ரேபிள்ரெனிஸ் ஆகிய விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

சென்ற வருடம் இக்கல்லூரி மற்றைய பல்கலைக் கழகங்களுடன் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபட்டு பல வெற்றிகளை ஈட்டியுள்ளது. இவ்வசதிகளுடன் நாட்டின பாதுகாப்புப் படையில் இவர்கள் சேர்ந்திருப்பதால் மாதாந்தம் இரண்டாயிரம் ரூபா மேலதிகமாக ஊக்கப் பணமாக வழங்கப்படுகின்றது

கொத்தலாவலை இராணுவக் கல்லூரியில் பயிற்சிபெற்ற அதிகாரி தர பயிலுநர்கள் தங்கள் திறமைகளை வடக்கிலும் கிழக்கிலும் நடக்கும் சமர்களில காட்டியுள்ளார்கள் இப்படியாகப் பயிற்சி பெற்ற மாணவர்களில் ஏழு



கொத்தலாவலை பாதுகாப்புக்கல்லூரி இரத்மலானை

பேர் தங்கள் உயிர்களை நாட்டுக்காகத் தற்கொடை செய்துள்ளார்கள். இவர்களின் பெயர்கள் கல்லூரியின் காட்சிப்பலகையில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாயிருக்கின்றது

> சிறிலங்கா அரசு ஒரு இராணுவக்கல்விக்கான பல்கலைக்கழகத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது சிறிலங்காவின் பிரதமர் ஒருவர் இப்பல்கலைக்கழகத்திற்காக தனது முழுச் சொத்தையும் வழங்கியிருக்கின்றார்.
>
> சிறிலங்காவின் ஒருமைப்பாட்டைப் பேணவே இப்பல்கலைக் கழகம் செயல்படும் எனக் கூறப்படுகின்றது.
>
> தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையை அழிக்கவே இப்பல்கலைக் கழகம் துணை போகின்றது.
>
> தமிழீழத்தில் பாடசாலைகள் அழிக்கப்படும் வேளை சிறிலங்காவில் இராணுவத்திற்கு பல்கலைக்கழகம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது
>
> தமிழ் மக்கள் தம்போரியல் கல்வியில் எவ்வளவு தூரம் கவனம் எடுக்க வேண்டும் என்பதையும், சிங்கள அரசு இராணுவத்துறைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றது என்பதையும் இக்கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது.

## நிர்வாகம்

சட்டரீதியாக அமைக்கப்பட்ட ஒரு சபையினால் இக் கல்லூரி நிர்வகிக்கப்படுகின்றது. இச்சபையில் தலைவராக இருக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் 1988-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 57-ம் சட்டத் திருத்தப் பிரகாரம் இக்கல்லூரியின் வேந்தராகக் கடமையாற்றுவார். மரபுவழியான பல்கலைக்கழக உபவேந்தர்களுக்குள்ள அதே தகுதி இக்கல்லூரியின் படைத்தலைவருக்குண்டு.

இக்கல்லூரியின்படைத் தலைவர் மூன்றுவருட காலம் பதவி வகிப்பதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். இப்பதவி மூன்று படைப் பிரிவுகளிலும் உள்ள உயர் அதிகாரிகளுக்குச் சுழற்சி முறையில் வழங்கப்படுகின்றது. தற்போது இக் கல்லூரியின் வேந்தராக ஜெனரல் சிறில் ரணதுங்கா அவர்களும், படைத் தலைவராகப் பிரிகேடியர் ஏ. எம். யூ. செனிவிரத்ன அவர்களும் இருந்து வருகின்றனர்

முப்படைகளின் தளபதியாகவும். பாதுகாப்பு அமைச்சராகவும் ஜனாதிபதி விளங்குவதால் அவரது கண்காணிப் பின்கீழ் இக்கல்லூரி இயங்குகின்றது. இதன் காரணமாகவே ஜனாதிபதி பிரேமதாசா இக்கல்லூரியின் நடவடிக்கைகளில் மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றார். உலகத்திலுள்ள இராணுவக் கல்லூரிகளில் இக்கல்லூரியை அதிசிறந்த கல்லூரியாகத் தான் ஆக்கிக் கொடுக்கப்போவதாக சென்ற வருடம் ஜனவரிமாதம் 14ஆம் திகதி நடைபெற்ற இக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு வைபவத்தின்போது ஜனாதிபதி கூறியுள்ளார்.

சேர்ஜோன் கொத்தலாவலை அவர்களின் ''என்றும் நாட்டுக்காக'' என்ற தாரக மந்திரத்தையே தனது தாரக மந்திரமாக இக்கல்லூரி கடைப்பிடித்து வருகின்றது. இந்தத் தாரக மந்திரம் குறிக்கும் தற்கொடை உணர்வை இந்தக் கல்லூரியில் இருந்து வெளியேறும் பயிலுனர்களுக்கு இக்கல்லூரி ஊட்டி வருகின்றது.

பல்கலைக்கழக அனுமதிக்கு க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்த புள்ளியாகவிருக்கும் 180 புள்ளிகளைப் பெற்ற ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் வருடாவருடம் இந்தக் கல்லூரியில் சேர்ந்துகொள்வதற்காக விண்ணப்பிக்கின்றார்கள். இவர்கள் இரண்டு நேர்முகப் பரீட்சைக்கு இக்கல்லூரியிலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு பாதுகாப்பு அமைச்சிலும் தோற்ற வேண்டியிருப்பதோடு ஆங்கில மொழியிலும் பரீட்சிக்கப்படுகின்றார்கள்.

இந்த விண்ணப்பங்களில் 90 °/. சதவீதமானவை பரிசீலனை செய்யப்படும்போது நிராகரிக்கப்படுகின்றது. மிகுதியாகவுள்ள 10 °/. சதவீதத்தில் தெரிவு செய்யப்பட்டோரும் அவர்கள் வாழ்க்கைப் பின்னணிகள் நன்கு ஆராயப்பட்ட பின்னரே சேர்க்கப்படுவர்.

(2-ஆம் பக்கம் பார்க்க)

### சிந்தனைக்கு

ஆணவத்துடன் ஆதரவு அளித்து போலிப் புகழ்ச்சியை விலையாகப் பெறுபவர் வீணர்.

— ஸேமியல் ஜான்சன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 18-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

## எதற்காக ஆதரவு?

''இனநெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவும், அவரது அரசும் முன்வைத்திருக்கும் சிபார்சுகள், எடுத்திருக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றின் காரணத்தினால், பாராளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும், எமது பரிபூரணமான ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்கத் தீர்மானித்துள்ளோம்'' இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 'நான்கு தமிழ் பேசும் எம்.பிக்கள்' கைச்சாத்திட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்.

இந்நான்கு எம்.பிக்களும் எது குறித்து சிறிலங்கா ஜனாதிபதிக்கு இப்பாராட்டையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாக இப் பகிரங்க அறிக்கையை விடுத்துள்ளார்கள் என்பது குறித்து ஆச்சரியமாக இருக்கின்றது.

இலங்கையின், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படல் வேண்டும் எனப் பலதரப்பாலும் வற்புறுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில், இராணுவத் தீர்வு ஒன்றையே சிறிலங்கா அரசாங்கம் நாடி நிற்கின்றது. இதற்காக பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்து இராணுவத் தளபாடங்களை வாங்கிக் குவித்து வருகின்றது.

இதேவேளை, உலகின் கவனத்தைத் திருப்பவென அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு ஐ. தே. கட்சி சமாதானத் தீர்வுத்திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. இனப்பிரச்சினைத் தீர்விற்கு கருத்தொருமைப்பாடு உடைய தீர்வு அவசியம் என அறிவித்துள்ள சிறிலங்கா ஜனாதிபதியின் ஐக்கிய தேசியக் கட்சி — அரசாங்கத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டது — தீர்வுத்திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. வைக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் தெரிவித்துள்ளது அத்தோடு தம்மீது மட்டும் இது தொடர்பாக குற்றச்சாட்டு சுமத்தப்படாமல் இருப்பதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இச் சலுகைகளை அறிவித்துள்ளது. இதேவேளை அமைச்சர் தொண்டமான் வைதத தீர்வுத் திட்டத்திற்குக்கூட அரசாங்கம் வெளிப்படையான ஆதரவைத் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில், கிழக்கிலும் வடக்கிலும் சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்தும் நடத்திய வண்ணம் உள்ளது. மீளக் குடியமர்த்தல் என்ற போர்வையில், தமிழ் மக்கள் விரட்டப்பட்ட பகுதிகளில், சிங்களக் குடியேற்றங்களைப் பெரும் பொருட் செலவில் ஏற்படுத்தி வருகின்றது இதேவேளை, அகதி முகாம்களிலும் வெளியிலும் தமிழர்கள் பட்டினியால் வாடுகின்றனர். கிழக்கில், சிங்கள இராணுவத்தாலும், முஸ்லிம் காடையர்களினாலும் விரட்டப்பட்ட மக்கள் உண்ண உணவும், உறங்க இடமுமின்றி தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாக, பிச்சைக்காரர்களாக அலைய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும், தமிழ் மக்கள் மட்டும் கிழக்கில் சிங்கள இராணுவத்தாலும், காடையர்களினாலும் தாக்கப்படவில்லை. பேரினவாத ஆட்சியாளருடன் இணைந்து தமிழர் போராட்டத்தை அழித்துவிட உதவும் 'ரெலோ குழுவினரின்' திருமலை காரியாலயமும் சிங்களக் காடையர்களினால் தாக்கப்பட்டுள்ளது இதில் ஒருவர் பலமான வெட்டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அரசு அடிவருடிகளானாலும் அவர்கள் தமிழர் என்பதை சிங்களவர் மறக்கவில்லை அத்தோடு வடக்கு. கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுவது குறித்துதற்பொழுது பாராளுமன்ற உறுப்பினர்என இருப்பவர்கள் தெரிவித்த எதையும் அரசாங்கமோ, அதன் தலைவரோ கவனத்தில்எடுத்ததாக இல்லை.

இந்நிலையில், சிறிலங்கா ஜனாதிபதி இனப்பிரச்சினைத் தீர்விற்கு செய்துள்ள சிபார்சு, நடவடிக்கைகள் என எதைக் கூறிப் பாராட்டுத் தெரிவிப்பதோடு, எதற்கு ஒத்துழைப்பு வழங்கப் போகின்றார்கள்? தமிழரைப் படுகொலை செய்யும் இராணுவ நடவடிக்கைகளுக்கா? சிங்களக் காடையர்களின் கொள்ளைகளுக்கா? மக்களைப் பட்டினிபோடும் பொருளாதாரத்தடைகளுக்கா? தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் குடியேற்றங்களுக்கா? காலத்தைக் கடத்துவதற்கென உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கா?

இதில் எதற்கு என்று 'தமிழ் எம்பிக்கள்' அறுதியிட்டுச் சொன்னால், அதை தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

# வீடியோ திரையிடுவதற்கான புதிய விதிமுறைகள்

(நமது நிருபர்)

''ஒருவர் தனது வீட்டில் நிகழும் எந்த நிகழ்வின் போதும் அல்லது விரும்பும் போதும் வீடியோப் படங்கள் திரையிடுவதற்கு எந்தவித அனுமதியும் பெறவேண்டியதில்லை. ஆனால் விடுதலைப் போரின் பெறுமானத்தையும் புனிதத்தையும் புரிந்து கொண்டு மூன்றாம் தரத் திரைப்படங்களைத் திரையிட்டுமக்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லவேண்டாம் என விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

''வீடியோபடங்கள் திரையிடுவதற்கான புதிய விதிமுறைகள்'' என்ற தலைப்பில் இக் கழகம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பொன்றிலேயே இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுளளது. இதன் முழு விபரமும் வருமாறு;

எம்மண்ணில் நடந்துகொண்டிருக்கும் எமது தாயக விடுதலைப் போராட்டத்திற்கு எந்தவித இடையூறுமின்றி எம் மக்களின் அன்றாடவாழ்வு அமையவேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோம். எம் தாயகத்து விடுதலைப்போரில் நின்று மக்களை அந்நியப்படுத்தும் அனைத்துக் காரணிகளையும், காரணிகளுக்கான செயற்பாடுகளையும் சமூக உணர்வுள்ள எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். தமிழீழத்தில் இன்று வீட்டுக்குவீடு வீடியோப் படம் பார்ப்பது பெருகியுள்ளது. மக்களின் உணர்வுகளையும் அவரவர் இரசனைக்கேற்ற கலை வடிவங்களைப் பார்ப்பதையோ ரசிப்பதையோ நாங்கள் கட்டுப்படுத்தவில்லை.

எனவே இன்று தொடக்கம் ஒருவர் தனது வீட்டில் நிகழும் எந்த நிகழ்வின்போதும் அல்லது விரும்பும் போதும் வீடியோப்படங்கள் திரையிடுவதற்கு எவ்வித அனுமதியும் பெறவேண்டியதில்லை: ஆனால் எம் விடுதலைப் போரின் பெறுமானத்தையும் புனிதத்தையும் புரிந்து கொண்டு மூன்றாம் தரத் திரைப்படங்களைத் திரையிட்டு மக்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லாதிருக்கும்படி எம் மக்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிதியுதவிக் காட்சிகளாகத் திரையிடப்படும் திரைப்படங்களுக்கான அனுமதியை மட்டும் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழக பிரிவுச் செயலகங்களிலும் மாவட்டச்செயலகங்களிலும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இதுதவிர வீட்டிலோ அல்லது பொது இடங்களிலோ வருமானம் கருதி தினசரி சிறிய அரங்கம் போன்று 'வீடியோ' திரைப்படம் திரையிடுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. கூட்டாகவோ அல்லது தினசரி ஓரிடத்திலேயோ குழுமியோ பண வருவாயை மாத்திரம் கருத்தில் கொண்டு 'வீடியோ' திரைப்படம் திரையிடுபவர் தண்டனைக்குரிய குற்றம் இழைத்தவராகக் கருதப்படுவதுடன் திரைப்படம் காட்டுவதற்குரிய சாதனங்களும் பறிமுதல் செய்யப்படும். எமது இவ்விதிமுறைகளை ஏற்று எம் இனிய மக்களை எம்முடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

### உல்லாசப் பயணிகள்

## தகாதமுறையில் நடந்தால் நாடு கடத்தப்படுவர்

(கொழும்பு)

இலங்கை வரும் உல்லாசப் பயணிகளுடன் சிறுவர்கள் நடமாடுவதைக் கண்டால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் பகுதியினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இவ்வாறான பயணிகள் தகாத முறையில் சிறுவர்களுடன் நடந்து கொண்டால் உடனடியாக அவர்களை நாடு கடத்தவும் பொலிசாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று உல்லாசப் பயணத்துறை இராஜாங்க அமைச்சர் திரு. காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹொலிடே இன் ஹோட்டலில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அவர் தொடர்ந்து கூறும்போது;

உல்லாசப் பயணத்துறை மூலமே நாட்டில் எயிட்ஸ் முதலான நோய்கள் பரவுவதாகக் குறை கூறப்படுகிறது. ஆனால் இது தொடர்பாக ஆய்வு நடத்தும் டாக்டர் ஜயகுரு நாட்டில் கண்டு பிடிக்கப்பட்ட 49 எயிட்ஸ் நோயாளிகளில் 44 பேர் இலங்கையர் எனக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் வெளி நாடுகளுக்கு வேலைக்குச் சென்ற சமயமே இவ்வாறான நோய்க்குள்ளானார்கள். எனவே எயிட்ஸ் நோய் முற்றிலும் வெளிநாட்டுப் பயணிகளால் தான் நாட்டிற்குள் கொண்டு வரப்படுகிறது என்பது தவறு எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நீர்கொழும்புப் பகுதியில் உல்லாசப் பயணிகள் சிறுவர்களை தவறான உடலுறவுக்குப் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே தான்இப்பகுதி பொலிசாருக்கு அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சொன்னார்.

## பாடசாலை அபிவிருத்திக்கு அபிவிருத்தி நிதியம்

(கொழும்பு)

பாடசாலைகளின் அபிவிருத்திக்கெனப் பாடசாலை அபிவிருத்தி நிதியம் என்ற புதிய திட்டம் ஒன்று தொடக்கப்படவுள்ளது.

ஆசிரியருக்கும்பாடசாலைச் குமிடையில் நல்லெண்ணத்தை வளர்க்கும் நோக்கத்துடன், ஆசிரியர் நியமனங்கள் புதிய முறையில் செய்யப்படவுள்ளன. புதிதாக நியமனம் பெறுபவருக்கு அவரின் சுயவிருப்பத்துக்கு அமையப் பாடசாலைகள் கொடுக்கப்படும். முதல் நியமனத்திலிருந்து ஓய்வு பெறும் வரை நியமனம்பெற்ற பாடசாலையிலேயே ஆசிரியர் கடமையாற்ற இப் புதிய திட்டம் உதவுகிறது.

## கோலாகலமான முறையில் கம்பன்விழா நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் மூன்றாவது நாள் கம்பன்விழா நேற்றுமுன தினம் கோலாகலமாக நடைபெற்றது.

நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற மாலை நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கள இசை முழங்கியது.

விசேட நிகழ்ச்சிகளாக திரு. இ. ஜெயராஜ் தலைமையில் ''வாலிவதை நீதிக்குப் புறம்பானது'' என்னும் தலைப்பில் வழக்காடுமன்றமும், ''காகுத்தன் பெருமைக்கு கைகொடுத்தோர் என்ற தலைப்பில் இளைஞர் கருத்தரங்கும், ''இன்று சந்திக்கும் இவர்கள்'' என்னும் நாடக அரங்கும் இடம்பெற்றது. மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்தினர் குழுமியிருந்து நிகழ்ச்சிகளை ஆவலுடன் கண்டுகளித்தனர். (க)

## தங்கச் சங்கிலி கடத்தியவர் கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

இருபத்தைந்து தங்கச் சங்கிலிகளை பவுடர் ரின்னுக்குள் மறைத்து கடத்தி வந்த நபர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளினால் கண்டு பிடிக்கப்பட்டார்.

இலங்கைப் பிரஜையான இவர் சிங்கப்பூரில் இருந்து கடத்தி வந்த மேற்படி சங்கிலிகள் ஒரு இலட்சத்து முப்பதினாயிரம் பெறுமதி வாய்ந்தவை என்றும், இதற்கென ஒன்பது லட்சம் பெறுமதியான தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்றும் உதவிச் சுங்கப் பணிப்பாளர் திஸ்ஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

## யூலையில் உலகத் தமிழர் பண்பாட்டு விசேட மாநாடு

எதிர்வரும் யூலை மாதத்தில் பாண்டிச்சேரியில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சிறப்பு மாநாடு ஒன்று உ. த. ப இன் பாண்டிச்சேரிக் கிளையின் தலைவர் கவிஞர் மதுரகவி தலைமையில் நடைபெறவிருக்கின்றது இம் மாநாட்டிற்கு உலகத்தின் பல பாகங்களிலும் இருந்து தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்ள இருக்கின்றார்கள். (14)

## மேசைப் பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் மேசைப் பந்தாட்டப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

மேற்படி சங்க மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம், 22 ஆம், 23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இப் போட்டிக்கு சகல மேசைப் பந்தாட்ட வீரர்களையும் வீராங்கனைகளையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# போர்பஸ் பீரங்கி பேரத்தில் ராஜீவ் லஞ்சம் பெற்றார்

## போர்பஸ் நிறுவன அதிகாரி தகவல்

போர்பஸ் பீரங்கி வியாபாரப் பேரத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் காலஞ்சென்ற ராஜீவ் காந்தி உட்படப் பல உயர் இந்திய அரசியல் வாதிகளுக்கு லஞ்சம் வழங்கப்பட்டது உண்மையே என்று சுவீடன் நாட்டு போர்பஸ் நிறுவன உயர் அதிகாரி ஒருவர் ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

இந்தியாவுக்கும் சுவீடன் நாட்டு போர்பஸ் நிறுவனம் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் பீரங்கிகளை விற்றது.

சுவீடன் நாட்டுச் செய்தித்தாள் ஒன்றுக்குப் பேட்டிவழங்கிய இந்த அதிகாரி தமது பெயரை வெளியிட விரும்பவில்லை.

இந்த ஆயுத விற்பனை ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதாயின் முதலில் ராஜீவ் காந்திக்கும், காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கும் தரகுப் பணம் கொடுக்க வேண்டும் என்பது சட்டாயமான நிபந்தனையாக இருந்ததாக அவர் தெரிவித்தார். அந்த நேரம் சுவீடன் நாட்டு மிகப்பெரிய வெளிநாட்டு ஆயுத வியாபாரமாக இந்த ஒப்பந்தம் விளங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விவகாரமும், இதனோடு தொடர்பான லஞ்சக் குற்றச்சாட்டுக்களும் 1989 இல் இடம் பெற்ற இந்தியப் பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தோல்வியைத் தழுவக் காரணமாக இருந்தது.

ஆனால் சுவிஸ் வங்கிக் கணக்குப்பதிவேடுகளில் இடப்பட்ட கொடுப்பனவுகள் ஆயுத விற்பனை தொடர்பான ஆலோசனைக் கட்டணம் மட்டுமே என்று முன்பு போர்பஸ் நிறுவனமும். சுவீடன் நாட்டு அரசும் தெரிவித்திருந்தன.

# பாதுகாப்பு நடவடிக்கைகள் கொழும்பில் தீவிரம்

(கொழும்பு)

கொழும்பில் பாதுகாப்பு நடவடிககைகள் நேற்று முன்தினம் பலப்படுத்தப்பட்டன என்று 'தினகரன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய நிறுவனங்கள், மற்றும் இந்திய ராஜதந்திரிகளுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும்,

விடுதலைப்புலிகள் கொழும்பில் முக்கியமான இடங்களை தாக்கலாம் என உளவுப் பிரிவு எச்சரித்ததனாலேயே இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் தினகரன் குறிப்பிட்டுள்ளது.

இதேநேரம் சிறிலங்கா ராணுவத்தினரின் கவனத்தை திருப்புவதற்கு விடுதலைப் புலிகள் கொழும்பில் இந்திய தூதரகம் மீதிலும், இந்திய நலன்புரி நிறுவனங்கள் மீதும் தாக்குதல் நடத்தலாம்எனசிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளனவாம்.

இந்திய-திபெத் எல்லைப் பொலிசைச் சேர்ந்த எண்பது பரா ராணுவத்தினர் இந்திய தூதுவர் என். எம். ஜாவிற்கு பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கச் சங்கிலி கடத்தல் யாழ். வாசி கைது

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து யாட்லி பவுடர்ரின்னில் 1,25,000 ரூபா பெறுமதியான 25 தங்கச் சங்கிலிகளைக் கடத்திவந்த யாழ்ப்பாண வாசியான ஒருவர் கடந்த வெள்ளியன்று கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டார். இவருக்கு 2,00,000 ரூபா தண்டம்விதிக்கப்பட்டது

இவரைச் சந்திக்க வான் ஒன்றில் வந்த இரு நபர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வாகனம் பறிமுதல் செய்யப்பட்டதோடு, இருவருக்கும் தலா 2,00,000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

# 'ஹெலஉறுமய' தொடர்ந்து செயற்பட முடிவு

ஹெல உறுமய' என்ற பெயரில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உருவாக்கப்பட்ட குழுவினர் தாம் தொடர்ந்தும் செயல்படப்போவதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக திலக் கருணாரத்னா, எஸ். எஸ். குணசேகரா, நெவில் பெர்னான்டோ, மற்றும் ஜினதாச நியதபால ஆகியோர் கூட்டாக விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் கட்சியின் கொள்கைகளுக்கு இக்குழு விரோதமானதாகவில்லை எனக் கூறியுள்ளனர்.

மேலும் இக்குழுவின் செயற்பாட்டிற்கு கட்சியின் மத்திய குழு ஏற்கனவே தடை விதித்துள்ளது தெரிந்ததே

### சாவிற்கு

லாம், சாதாரண தொழிலாளி கூட என்னைச் சுட்டுக் கொல்லலாம், என்விதி அப்படி இருக்கலாம், ஆனால் நான் எனது அரசியல் கொள்கையில் ஒரு போதும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. நான் இந்த நாட்டின் எல்லா இடங்களுக்கும் செல்கிறேன் எனக்கு சிலர் நெருப்புத்தண்ணீர் ஊற்ற முயலலாம்.

நான் வாழ்ந்தாலும் செத்தாலும் லட்சியத்தோடுசெயல்படுத்துவதே எனது கொள்கை மக்களுக்காக நான் முன் வைத்துள்ள லட்சியக்கொள்கையில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. அதனால் எந்த நெருக்கடிக்கும் நான் அஞ்சப் போவதில்லை என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி இராணுவ முகாமில் இருந்து தொடர்ச்சியாக நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் எஸ். சிறிகாந்தா (வயது 34) வீ. மகாலிங்கம் (வயது40) ஆகிய இருவரும் பலத்த காயமடைந்திருக்கின்றனர். (க)

### அச்சுவேலி

மடைந்தார்

இதேவேளை வளலாய், கட்டுவன், குட்பிளான், வீமன்காமம் ஆகிய பகுதிகளிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாககுதல்களையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

### ஊரியான்

கள் எதுவும் நடத்தப்படவில்லை.

தற்போது யாழ் குடா நாட்டிலிருந்து வவுனியா வரும் மக்களின் பாதையான ஊரியான் வழிப்பாதையை மூடி விடுவதற்கு சிறிலங்கா இராணுவம் திட்டமிட்டுவருவதாகவும அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### வீரச்சாவு

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று காலைஇடம் பெற்ற நேரடி மோதலில் வீரவேங்கைகள் கலாநிதி (பால மனோகரி குணசேகரம் ஆழியவளை, தாழையடி), மங்களா (தேவிகா அப்புத்துரை-தம்பிராய்) ஆகியஇருபெண் போராளிகள் வீரச்சாவு அடைந்தார்கள்-

17 7 91 அன்று ஆனையிறவில் நடைபெற்ற தாக்குதலில் விழுப்புண் அடைந்துவைத்திய சிகிச்சை பெற்று வந்த தங்கப்பன் அல்லது ஜெரேன் (அப்புக்குட்டிரவி-சாவகச்சேரி)நேற்று வீரச்சாவு அடைந்தார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# ஜனதா தலைவர்கள் பொம்மை, சிவாஜி உட்பட பலர் சென்னையில் கைது

ஜனதாதள் தலைவர் எஸ். ஆர் பொம்மை, இக்கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவர் சிவாஜிகணேசன், கொள்கை பரப்புச்செயலர்இராசெழியன் உட்படப் பலர் நேற்றுச் சென்னையில் கைது செய்யப்பட்டனர்.

மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்து சென்னை அண்ணா சாலை அஞ்சலகம் முன் மறியல் செய்ய முயற்சித்த போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மதுரையில் இக் கட்சியின் சட்ட சபை உறுப்பினர் குமாரதாஸ் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர். மாநிலத்தில் வேறுசில இடங்களிலும் இக்கட்சியின்தொண்டர்களும், ஆதரவாளர்களும் மறியல் செய்ய எத்தனித்த போது கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் நேற்றுமாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

# இலவசக் கல்வி

(நமது நிருபர்)

யாழ். குருநகர் சென் றோ. க. த. க பாடசாலையில் ஆண்டு மூன்று முதல் ஆண்டு ஒன்பது வரையான வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக கல்வி போதிக்கப்படும் என விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் அறிவித்துள்ளது.

இதில் சேர்ந்து கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3. 30 மணிக்கு அப்பாடசாலையில் தொடர்பு கொள்ளும்படி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ம. வாசுகி கேட்டுள்ளார்.

# கல்லுண்டாய் வெளியில் குப்பை கொட்டத் திட்டம்

அதிவிரைவில் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் மாநகரசபையினாலும் கொள்கலன், மற்றும் குப்பைகள் என்பனவற்றை நகரத்தில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கல்லுண்டாய் வெளியில் போடுவதற் திட்டமிட்டுள்ளனர் இதனால் மாநகர எல்லைக்கு உட்பட்ட இடங்களில் ஓரளவு சுகாதாரக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும் என சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரம் தெரிவித்தார். (75)

# மனித உரிமை மீறல்களுக்கு வெளிநாட்டவரே காரணம்

**- அமைச்சர் ரணசிங்கா**

(கொழும்பு)

சிறிலங்காவில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்கு, வெளிநாட்டாரின் வருகையும் அந்நியரின் ஆக்கிரமிப்புமே காரணம் என தகவல் துறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க தெரிவித்தார். சுற்றாடல் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

நம்நாடு அகிம்சைக்கும் புத்ததர்மத்துக்கும் பெயர்பெற்ற நாடு, கொல்லாமையே நமது தாரகமந்திரம் அப்படிப்பட்ட நமதுநாடு சமீபகாலத்தில்ஏன் இப்படி மாற்றமடைந்தது?

வெளிநாட்டினரின் வருகையுடனும் ஆக்கிரமிப்புடனுமே இது ஆரம்பமாகியது. எனவே இங்கு நடக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் அவையே காரணம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### போட்டி முடிவுகள்

சிறுகதை: 'இவர்கள் புலிகள்' இரண்டாம் பரிசு கா. சுஜந்தன் சுதர்சன் முகாம் கன்னாதிட்டி 'தாய்' மூன்றாம் பரிசு திருமதி சாவித்திரி 214/5 இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

கவிதை: 'என் பிரியமான சகோதரனுக்கு' இரண்டாம் பரிசு திருமகட்செல்வி குணரட்ணம் புங்குடுதீவு-4. 'துடிக்கின்ற புழு' மூன்றாம் பரிசு மு பாலசுப்பிரமணியம் கும்பாவெளி, மந்துவில் கொடிகாமம்.

கருத்துப்படம்: இரண்டாம் பரிசு மு. கிருபானந்தம் நாவற்கட்டை கோப்பாய் வடக்கு, கோப்பாய். மூன்றாம் பரிசு பு. செந்தில்ரூபன் மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பழை.

பரிசுக்குரியவர்கள் நாளை புதன்கிழமை காலை பத்து மணிக்கு தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் ஈழநாதம் அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

### 1000 பட்டதாரி

பட்டதாரிகள் இதற்கு விண்ணப்பித்திருந்தனர் என்றும், தேவையானவர்களை தெரிவு செய்வதற்காக இந்த மாதம் இறுதிப் பரீட்சை நடத்தப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்

விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கணக்கியல் துறைசார்ந்த ஆசிரியர்களே நியமிக்கப்படவுள்ளார்கள். மாவட்ட அடிப்படையில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கும் இவர்களுக்கு அவர்களது மாவட்டங்களிலேயே நியமனம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஹிஸ்புல்லா தலைவர் தாக்குதலுக்குப் பலி

(பெய்ரூட்)

லெபனானிய ஹிஸ்புல்லா இயக்கத்தலைவர்ஷேக்அபாஸ் மூஸவி இஸ்ரேலிய உலங்குவானூர்தி நடாத்திய றொக்கட்தாக்குதலுக்குப் பலியானார். அவருடன் காரில் பயணம் செய்த அவருடைய மனைவி, மகன், ஐந்து மெய்ப் பாதுகாவலர்களும் காருடன் கருகி மரணமாகினர் இச்சம்பவம் தெற்கு லெபனானில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கடந்த ஒக்டோபர் மாதம் மற்றிட்டில் மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுகள் ஆரம்பமான பின்னர், தெற்கு லெபனானில் இஸ்ரேல் தானாகப் பிரகடனம் செய்திருந்த பாதுகாப்பு வலையத்தில் இந்தத் தாக்குதல் நடந்தது.

இவ்வாறு இவர் கொல்லப்பட்ட சம்பவம் தற்செயலானது அல்ல என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். அரேபிய தீவிரவாதிகளால் மூன்று இஸ்ரேலியப் படையினர் சுட்டுக் கொல்லப்பட்ட மறுதினம் இந்தச் சம்பவம் நடந்தது.

39 வயதுடைய ஷேக்அபாஸ் முசாபி, ஹிஸ்புல்லா இயக்கத்தின் பொதுச் செயலாளர் ஆவர். 1982 ஆம் ஆண்டு அந்த இயக்கத்தை தொடக்க உதவினார். அண்மையில்இந்த இயக்கம் இஸ்ரேலியப் படைகள் மீது தாக்குதல்களை அதிகரித்திருந்தது.

இதேவேளை இவரது கொலை மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பாதிப்பு எதனையும் ஏற்படுத்துமா என்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

# "விடுதலைப் புலிகள்" நாளை வெளிவருகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையின் (குரல் 28) 1992 மாசி மாத இதழ் நாளை வெளிவருகிறது இவ் இதழ்.

'தனியார் கல்வி நிறுவனங்களும் - பாடசாலைகளும்' என்ற தலைப்பில், தனியார் கல்வி நிறுவனங்கள் மீது புலிகள் இயக்கம் மேற்கொண்டுள்ள வரையறைகளை விளக்கும் ஒரு கட்டுரையும்,

''சிறிலங்கா இராணுவ இயந்திரமும், தமிழீழ விடுதலைப் போராட்டமும்'' என்ற தலைப்பில் சிங்கள இராணுவ இயந்திரம் தொடர்பான விபரங்களைக் கொண்ட ஒரு கட்டுரையும்,

''உளவாளிகள்: எப்படி உருவாகின்றார்கள் / உருவாக்கப்படுகின்றார்கள்'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும், மேலும் பல விடயங்களையும் உள்ளடக்கியிருக்கின்றது. இவ் இதழ் ஒன்றின் அன்பளிப்பு ரூபா 7/50 ஆகும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது